# கிறிஸ்துவின் மகிமைக்குப் புதிய ஆராதனை

*ஆயிரக்கணக்கான யூதர்களின் ஆராதனை நடைமுறைகள் ஒரே நாளில் மாற்றம் அடைந்தன! பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு சுவிசேஷத்தை முன் வைத்ததைக் கேள்விப்பட்ட போது, குறைந்தபட்சம் மூவாயிரம் மக்களின் மத வாழ்வானது முற்றிலுமாய் மாறுபட்டது.*

*தங்கள் வாழ்நாள் முழுவதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தில் உள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்திருந்த யூதர்கள், அப். 2ல் கிறிஸ்தவர்களானபோது, திகைப்பூட்டும் மாறுதலுக்குட்பட்டார்கள். திடீரென்று ஆயிரக்கணக்கானவர்கள், தாங்கள் இதற்கு முன் கண்டிராத மற்றும் கேட்டிராத வழிகளில் தேவனை ஆராதித்தார்கள். பழைய ஏற்பாட்டின் நன்கு பழக்கப்பட்ட செயல்பாடுகள் எல்லாம் அவர்களின் வாழ்க்கையில் திடீரென்று இல்லாமல் போய் விட்டன. நினைவுகூரத்தக்க சில விஷயங்கள் நடந்திருந்தன; நியாயப் பிரமாணத்தை நொறுக்கக் கூடிய ஏதோவொன்று வந்திருந்தது: இயேசுவின் சிலுவை மரணத்தைத் தொடர்ந்து வந்த நாட்களில் இம்மக்களுக்கு நித்தியத்திற்கான நம்பிக்கையை ஏதோ ஒன்று கொண்டு வந்திருந்தது. இப்படிப்பட்ட புதியதொரு ஆராதனை முறைமைக்குத் தேவனுடைய அறிவுறுத்தல்களே காரணமாய் இருந்திருக்கக் கூடும்.*

## ஒரு புதிய ஆராதனை முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது

*இந்தக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்கென்று தங்களின் மனமாற்றத்தைத் தொடர்ந்து, தங்கள் ஆராதனையில் புதிய செயல்பாடுகளையும், அன்றாட வாழ்வில் ஒரு புதிய வழி முறையையும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் "அப்போஸ்*

*தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந் தார்கள்" (அப். 2:42). பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக இயேசுவைப் பின்பற்றியவர்கள் இவ்விதமாய்ச் செயல் பட்டதாக ஒருபொழுதும் நாம் வாசிப்பதில்லை. அவர்கள் நியாயப்பிரமாணத்தை உண்மையுடன் பின்பற்றியவர்களாய் இருந்தது போலவே, இந்த நடைமுறைகளிலும் "உறுதியாய்த் தரித்திருந்தார்கள்."*

*இந்த பெந்தெகொஸ்தே நாளன்று நான்கு செயல்கள் தொடங்கியதாக லூக்கா குறிப்பிட்டார். முதலாவதாக, கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் போதனைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக அப்போஸ்தலர்களின் உப தேசத்தை - ''அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்'' - பின்பற்றத் தொடங்கினார்கள். நியாயப்பிரமாணத்துடன் ஒத்துப் போனாலும் போகாதிருந்தாலும் அப்போஸ்தலர்கள் என்ன உபதேசித்தார்களோ, அதன்படியே அவர்கள் வாழத் தொடங்கினார்கள். அவர்கள் இந்த உபதேசத்தின் பெரும் பகுதியைச் செய்வதற்குத் தேவாலயத்தின் பொதுக் கூடங் களைக் கூடப் பயன்படுத்தினார்கள் (அப். 2:46).*

*இரண்டாவதாக, அவர்கள் நியாயப்பிரமாணத்தின் தசம பாக முறைமைகளுக்குப் பதிலாக ஐக்கியத்தில் (koinonia) தொடர்ந்து உறுதியாய்த் தரித்திருந்தார்கள். புதிய ஏற்பாட்டில் "ஐக்கியம்" என்ற வார்த்தை பலவித அர்த்தங்கள் உடையதாய் இருக்க முடியும், ஆனால் இவ்விடத்தில் சந்தர்ப்பப் பொருளானது இவ்வாழ்க்கையின் தேவைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அர்த்தத்தையே குறிப்பிடுகிறது என்பது தெளிவு. மனம் மாறியவர்கள் தங்கள் உடைமைகளையும், நிலங்களையும் விற்று அந்தக் கிரயத்தை எருசலேமில் அந்த வேளையின் போது எழுந்த தேவைகளுக்காகக் கொடுத்தார்கள் (அப். 2:45). அங்கு பார்வையாளராய் வந்திருந்த யூதர்கள் சில காலத்திற்குப் பிறகு தங்கள் வீடுகளுக்குத் திரும்புவார்கள், ஆனால் அவர்கள் மேசியாவைப் பற்றியும் தேவகுமாரன் தமது இராஜ்யத்தில் செய்த புதிய ஆளுகை பற்றியும் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள அவர்கள் உணர் வெழுச்சியும் ஆவலும் உடையவர்களாய் இருந்தார்கள்.*

*மூன்றாவதாக, மனம்மாறிய யூதர்கள் ஒன்றுகூடி, "அப்பம்*

*பிட்கத்" தொடங்கினார்கள். இதே சொற்றொடரானது மற்ற சந்தர்ப்பப் பொருட்களில் பொதுவான உணவு உண்பதை அர்த்தப்படுத்தக் கூடியதாய் இருக்கின்றது (அப். 2:46), ஆனால் இவ்விடத்தில் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத் திற்குப் பதில்செயலாக ஆராதனைச் செயல்பாட்டில் சில விஷயங்களைச் செய்தார்கள். சாதாரணமாக உணவில் அப்பம் பிட்குதல் என்பதில் புதியதொன்றும் இல்லாதிருக்கையில், இது அவர்களுக்குப் புதியதாயிருந்தது என்பது தெளிவு. மேலும் ஆராதனையின் மற்ற மூன்று செயல்பாடுகள் குறிப்பிடப் பட்டிருக்கும் அப். 2:42ல் இந்தச் செயல்பாடும் குறிக்கப் பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து பகிர்ந்து கொண்ட இந்த உணவானது கர்த்தருடைய இராப்போஜனமாக இருந்தது (1 கொரி. 11:20-28).*

*நான்காவது, மனம் மாறியவர்களின் ஜெபங்கள் சிலுவை யில் மரித்த இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஏறெடுக்கப்பட்டன (1 தெச. 5:17, 18). அவர் கர்த்தரென்றும் கிறிஸ்துவென்றும் (அப். 2:36) மற்றும் அவர்களுடைய மத்தியஸ்தரென்றும் (1 தீமோ. 2:5) அங்கீகரிக்கப்பட்டிருந்தார். அவர்களுடைய நாட்டின் பதினைந்து நூற்றாண்டு கால வரலாற்றில் ஆபிர காமின் சந்ததியார் இதற்குமுன் ஒருபொழுதும் இயேசு கிறிஸ்து என்ற மத்தியஸ்தரின் மூலமாக ஜெபம் செய்திருந்ததில்லை.*

*இந்த சந்தர்ப்பப் பொருளில் குறிப்பிடப்படாததும், இயேசுவின் மூலமாகத் தேவனை மகிமைப்படுத்துவதுமான இன்னொரு செயல்பாடும் கூட அவர்களின் ஆராதனையின் ஒரு பாகம் ஆயிற்று: அது இசை ஆராதனையாகும். பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் இருந்த போது தேவனைத் துதித்துப் பாடல்கள் பாடினார்கள் (அப். 16:25). ஆராதனைக்கான அப்போஸ்தலர்களின் அறிவுறுத்தல்களில் இசையும் உள்ளடங் கியிருந்தது. கொரிந்துவில் சபை கூடுதலின்போது நடந்த தவறான மற்றும் மாறான பயன்பாடுகள் சிலவற்றைப் பவுல் திருத்திய பொழுது, ஆராதனையின் செயல்பாடுகள் யாவும் எல்லாருடைய பிரயோஜனத்திற்காகவும் செய்யப்பட வேண்டும் என்பதற்கு அவர் ஜெபம் மற்றும் பாடுதல் ஆகிய வற்றை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தினார், இது தெளி வாகப் புரிந்து கொள்ளப்பட்டது (1 கொரி. 14:15). புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் ஆராதனையில் அனைவரும்*

சேர்ந்து பாடுதல் என்பதே இசையாகும்.

# ஒரு புதிய ஆராதனை விளக்கமளிக்கப்பட்டது

**"அப்போஸ்தலருடைய உபதேசம்"**

*அப்போஸ்தலருடைய உபதேசமானது நியாயப்பிர மாணத்தை மூடி மேற்கொண்டது (அப். 2:42). இயேசு தம்மைக் குறித்த எல்லா தீர்க்கதரிசனங்களும் உண்மையாயிற்றென்று உரிமை கோரினார்; ஆகையால், நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களும் இனி அமுலில் இல்லை (லூக். 24:44). சாதாரண மக்களும் வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு புதிய மற்றும் இறுதியான வெளிப்படுத்துதலை அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது (எபே. 3:3-5). இவ்வெளிப் படுத்துதலானது தேவனிடத்திலிருந்து வந்ததாகவும், ஒரு பொழுதும் வேறொரு சுவிசேஷமாக மாற்றப்படக் கூடாத தாகவும் இருந்தது (கலா. 1:6-9). இது பரலோகத்திலிருந்து வந்த இறுதியான செய்தியாகவும், இரட்சிப்பைத் தேடுகிறவர் களுக்கு "ஒருவிசை" ஒப்புக் கொடுக்கப்பட்ட தாகவும் இருந்தது (யூதா 3).*

*பன்னிருவரும் (பின்னாளில் பவுலும் கூட) கிறிஸ்துவின் அதிகாரத்துடன் பேசினார்கள், ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார்கள் (யோவா. 14:25, 26; 15:26; 16:7, 8). "ஏவப்படுதல்" என்ற வார்த்தையானது வழக்கத் திற்கு மாறான அல்லது சாதாரண மனித முயற்சிக்கு மேம்பட்ட விஷயத்தை மட்டும் குறிப்பதாயிராமல், இந்தப் பேச்சாளர்கள் மற்றும் எழுத்தாளர்களிடத்தில் தேவனுடைய ஆவியானவர் செயல்பட்டதைக் குறிக்கின்றது. என்ன கூற வேண்டும் மற்றும் என்ன எழுத வேண்டும் என்பதை ஆவியானவராயிருக்கிற தேவனே அவர்களுக்கு ஏவுதல் செய்தார், அதை அவர்களுக்கு அவர் ஊதினார். இந்தச் சத்தியங்கள் யாவும் தேவனுடைய சுவாசத்தினால் வெளியிடப்பட்டு, அப்போஸ்தலர்கள் மற்றும் புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்கள் ஆகியோரால் சுவாசத் தில் உள்ளிழுக்கப்பட்டன. ஆகையால், வேதவாக்கியங்கள்*

*எல்லாம் "தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோ. 3:16, 17). அப்போஸ்தலர்களின் இப்படிப்பட்ட போதனை களுக்குப் பின்னால் இருந்த அதிகாரமானது இயல்பானதல்ல ஆனால் தெய்வீகமானது ஆகும் (1 கொரி. 2:13).*

*புதிய சத்தியங்கள் மற்றும் வேதவாக்கியங்கள் ஆகிய வற்றைப் புரிந்து கொள்ளுதலானது நியாயப்பிரமாணத்தின் தகுதி வாய்ந்த மற்றும் உண்மையான நோக்கத்தைக் காண்பிக் கின்றது: அது இஸ்ரவேல் இனத்தைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவதற்கு ஒரு ''பள்ளி ஆசிரியராக'' அல்லது "உபாத்தியாக" இருந்தது (கலா. 3:23-25). இப்பொழுது கிறிஸ்து வந்திருந்ததால், இப்பொழுது அந்த ''விசுவாசமானது'' வெளிப்படுத்தப்பட்டு, நிறைவாக்கப்பட்டிருந்ததால் மோசே யின் நியாயப்பிரமாணம் இனி அமுலில் இருக்க வேண்டியதாய் இல்லை. அது தனது நோக்கத்தை நிறைவேற்றியிருந்தது. யூதர்களுக்கு அது இயேசு கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டிய தினால், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் அது தனக் குரிய இடத்தைப் பெற்றிருந்தது. தேவனை வணங்குபவர்கள் அவ்வேளையில் இருந்து இனித் தொடர்ந்து மதிக்கவும் பின்பற்றவுமே அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட புதிய உபதேசமானது கொடுக்கப்பட்டது.*

*"அப்போஸ்தலருடைய உபதேசம்" என்ற சொற்றொட ரானது ஆர்வம் நிறைந்த இலக்கணக் கட்டமைப்பு கொண்ட தாய் இருக்கின்றது. இது, 2 யோவான் 9, 10ல் ஐக்கியத்தைப் பற்றிக் கூறும், மிக அதிகமாய் வழக்காடப்படுகின்ற வசனப் பகுதியின் சொல்லமைப்புக்கு இணையாக உள்ளது.*

> *கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத் திலே நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத் தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாம லும் இருங்கள்.*

*இவ்விடத்தில் "கிறிஸ்துவின் உபதேசம்" என்ற சொற்றொடர் உள்ளது. கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பில் இவ்விரண்டும்*

*மிகச்சரியான ஒன்றாகவே உள்ளது. "கிறிஸ்துவின் உபதேசம்" என்பது பற்றி வழக்காடுபவர்கள், இது கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கப்பட்ட உபதேசம் அல்லது கிறிஸ்து போதித்த உபதேசம் என்பதை அர்த்தப்படுத்தக் கூடும் என்று புரிந்து கொள்கின்றார்கள். இது கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கப் பட்ட உபதேசம் என்று மட்டும் அர்த்தப்படுவதாயிருந்தால், அவரை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்கிற மக்கள் யாவரும் தாங்கள் நாமகரணக்கூட்டங்களின் அங்கம் வகித்தல் மற்றும் அவைகளின் நடைமுறைகள் ஆகியவற்றிற்கு அப்பால் ஐக்கியத்தைப் பராமரிப்பவர்களாய் இருக்க வேண்டும்.*

*இதற்கு மறுபுறத்தில், இது கிறிஸ்துவாலும் அவரது அப்போஸ்தலர்களாலும் போதிக்கப்பட்ட உபதேசங்கள் என்று மட்டும் அர்த்தப்படுத்துவதாயிருந்தால், ஐக்கியம் என்பது புதிய ஏற்பாட்டு போதனைகள் எல்லாவற்றிற்கும் உண்மையுள்ளவர்களுடன் மட்டும் இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்தப்படும். இயேசுவைக் கிறிஸ்து என்று ஏற்றுக் கொள்ளும் எல்லார் மத்தியிலும் தளர்வானதொரு ஐக்கிய மானது ஒரு புறத்தில் காணப்படும்; மறுபுறத்திலோ, அப்போஸ் தலருடைய உபதேசங்கள் யாவற்றுக்கும் உண்மையாயிருக்கிற மக்களின் நடுவே தனிச்சிறப்பானதொரு ஐக்கியம் நிலவும்.*

*இவ்விரு வசனப்பகுதிகளும் இலக்கணக் கட்டமைப் பானது இணையாக இருப்பதால், அப். 2:42ல் (*NASB*யில்)* "the apostles' teaching" *என்பதற்குப் பதில்* "the teaching of the apostles" *என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க முடியும்* [*தமிழில் 2 யோவான் 9ல் "கிறிஸ்துவின் உபதேசம்" என்றும் அப். 2:42ல் "அப்போஸ்தலருடைய உபதேசம்" என்றும் உள்ளன*]. *இது போலவே 2 யோவான் 9ம் வசனத்திலும்* "Christ's teaching" *என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க முடியும். அப்பொழுது, யோவானின் உபதேசமானது எல்லைக்குட்பட்ட ஒரு ஐக்கியத்தையே ஆலோசனை கூறுகிறதென்றும், இயேசுவைக் கிறிஸ்து என்று ஏற்றுக் கொண்டும், நாமகரணக் கூட்டத்தில் இருப்பவர்களுடன் பரந்ததொரு ஐக்கியத்திற்கு இவ்வுப தேசம் அடிப்படியையாய் இருப்பதில்லை என்றும் புரிந்து கொள்ள நம்பிக்கையளிக்கின்றது. கர்த்தரால் நிலைநாட்டப் பட்ட ஐக்கியக் கோடுகளை உடைத்துத் திறக்க விரும்புகின்ற*

*மக்கள் 2 யோவான் 9ன் உண்மையான அர்த்தத்தைக் கண்டறிவதைக் கடினமாய் உணர்கின்றார்கள்.*

**"அந்நியோந்நியம்"**

*மனமாற்றம் அடைந்த யூதர்களால் தழுவிக் கொள்ளப் பட்ட இரண்டாவது மாற்றமான அந்நியோந்நியம் என்பது அவர்கள் தம் உடைமைகள் பற்றிய கண்ணோட்டத்தையும், தேவையில் இருந்த மக்களைப் பற்றிய அவர்களின் அக்கறை யையும் மாற்றியது. Koinonia என்ற வார்த்தையானது அதன் பரந்த பொருளில், மதரீதியான உரிமைச் சடங்குகளில் சகோதரர்கள் இணைந்து பங்கேற்பதைக் குறிக்கின்றது. மற்ற சந்தர்ப்பப் பொருள்களில் இது கிறிஸ்தவர்கள் பிதாவோடும் குமாரனோடும் பரிசுத்த ஆவியானவரோடும் கொண்டுள்ள ஐக்கியத்தையும் (2 கொரி. 13:14), கிறிஸ்தவர்கள் ஒருவர் ஒருவருடன் கொண்டுள்ள ஐக்கியத்தையும் (1 யோவா. 1:7), கிறிஸ்தவர்கள் கர்த்தரின் பந்தியில் சிலுவையில் தொங்கிய கர்த்தரின் இரத்தம் மற்றும் சரீரத்துடன் கொண்டுள்ள ஐக்கியத்தையும் (1 கொரி. 10:16) குறிக்கப் பயன்படுகின்றது.*

*Koinonia என்பது பூமிக்குரிய உடைமைகளை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்வதைக் குறிப்பிடவும், நன்கு அறியக் கூடிய வகையில் பயன்படுத்தப்படுகின்றது (ரோமர் 15:26; 2 கொரி. 9:13). பலஸ்தீனத்தில் இருந்தவர்கள் ரோமாபுரியில் இருந்தவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டிருந்த தால், அதற்குப் பதில்செயலாக ரோமாபுரியில் இருந்தவர்கள் தங்களின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை, சரீரத் தேவைகளில் இருந்த பலஸ்தீனத்தைச் சேர்ந்தவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பவுல் வாதிட்டார். மேலும் பவுல், பிலிப்பி யில் இருந்த சபையின் கிறிஸ்தவர்கள் தமது சரீரப் பிரகாரமான தேவைகளில் உதவி செய்ய உண்மையாய் இருந்ததாகவும் நினைவூட்டினார் (பிலி. 1:5; 4:14-16).*

*அப். 2ன் சந்தர்ப்பப் பொருளில் "அந்நியோந்நியம்" என்பது சுவிசேஷத்தை ஏற்றுப் புதிதாய் மனம் மாறி சுவிசேஷத்தைப் பற்றித் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் கற்றுக் கொள்வதற் காக எருசலேமிலேயே தங்கியிருந்த வெளிநாட்டு யூதர்களுக் குத் தேவையான சரீரப் பிரகாரமான உதவிகளைச் செய்வதையே பெரும்பாலும் குறிப்பிட்டது. எருசலேமின்*

*சுற்றுப்புறங்களில் பல குடும்பங்கள் தங்கியிருந்ததையும், அவர்களின் உணவு மற்றும் வீடு திரும்பும் பயணச் செலவு ஆகிய தேவைகள் எழுந்திருந்ததையும் இப்படிப்பட்டதொரு நடப்பு (அந்நியோந்நியம்) நிகழ்ந்து அதை (அந்தத் தேவை களை) நிறைவேற்றியதையும் வரலாற்றாளர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள்.*

*கர்த்தருடைய ஊழியத்திற்கென்று காணிக்கை வழங்கும் இப்புதிய வழியைப் பற்றிய இன்னொரு மறைமுகமான உண்மை எதுவென்றால், தசமபாகம் கொடுப்பது என்பது இனியும் குறிப்பிடப்படவில்லை என்ற உண்மையேயாகும்! ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் கொடுத்திருந்த தால், தசமபாகம் கொடுத்தல் என்பது நியாயப்பிரமாணத்திற்கு முற்பட்ட காலத்திலேயே நடைமுறையில் இருந்தது (எபி. 7:1-4). கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் கீழ் தசம பாகம் பற்றிய வேறு உபதேசம் எதுவும் இராதிருந்தது, இது அவர்களின் கொடுத்தல் முறைமையில் ஒரு மாற்றம் உண்டா யிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. புதிய பிரமாணத்தின் கீழ், ஒருவர் தம் வரவுக்குத் தக்கதாகக் காணிக்கை கொடுக்க வேண்டியிருந்தது (1 கொரி. 16:2), ஒருவர் தம் நிறைவிலிருந்து அதைக் கொடுக்க வேண்டியிருந்தது (2 கொரி. 8:14, 15). கொடைகள் என்பவை பெருமளவில், மனதில் நியமித்தபடி, உற்சாகமாய்க் கொடுக்கப்பட வேண்டியவைகளாயிருந்தன (2 கொரி. 9:6, 7).*

### *“அப்பம் பிட்குதல்”*

*ஆராதனைச் செயல்பாட்டில் அப்பம் பிட்குதல் என்பது ஏவப்பட்ட இன்னொரு மாற்றமாய் இருந்தது, இது இயேசு சிலுவையில் அடைந்த மரணத்தைக் கனப்படுத்த நினைவு கூரும் ஒரு விசேஷித்த ஆசரிப்பாய் இருந்தது. கர்த்தருடைய மரணத்தின் நினைவான இப்போஜனமானது (1 கொரி. 11:26) கர்த்தர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் கொடுத்த அறிவுறுத்தல்களின் விளைவாய் உண்ணப்பட்டது (மத். 26:26-29; லூக். 22:17-20). கர்த்தர் தாமே இந்த ஐக்கியத்தில் இணைந்து, இந்த விருந்தில் உண்மைக் கிறிஸ்தவர்களுடன் இணைந்துண்பதால் நினைவு கூரும் இப்போஜனமானது கர்த்தருடைய இராஜ்யத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய*

*தாயிற்று (லூக். 22:29, 30). இந்த போஜனமானது சபை கூடி வருகையில் (1 கொரி. 10:16) புசிக்கப்பட வேண்டியதாகும், இது பொதுவான மற்ற எந்த உணவுடனும் ஒரு பாகமாய்ப் புசிக்கலாகாது (1 கொரி. 11:20-22, 33, 34).*

*நினைவு கூரும் இப்போஜனமானது இயேசு தம் சரீரத்தையும் இரத்தத்தையும் இவ்வுலகத்தின் பாவங்களுக்காக ஒப்புக் கொடுத்தார் என்பதைக் கிறிஸ்தவர்கள் நினைவு கூருவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதைப் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில், ஞாயிற்றுக் கிழமைகளில் கடைப் பிடிக்க வேண்டியதாயிருக்கின்றது (அப். 20:7). ஞாயிறு ஆராதனை என்பது ஆதி சபைகளில் முறையான வழக்கமாய் இருந்தது. தேவையில் இருப்பவர்களுக்கு உதவுவதற்குப் பணம் சேகரித்தல் பற்றிய அறிவுறுத்தல்களைப் பவுல் கொடுத்த பொழுது, அவர்கள் ஏற்கனவே கூடிவரப் பழக்கப்பட்டிருந்த நாளில் பணம் சேகரிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறியிருந்தார் (1 கொரி. 16:2). வாரத்தின் முதல் நாளில் கூடுவதற்குத் தொடங்கும்படி கிறிஸ்தவர்களுக்குப் பவுல் கூறவில்லை; மாறாக, வாரத்தின் முதல்நாளில் அவர்கள் வழக்கமாய்க் கூடி வரும்பொழுது, தங்கள் வரவுக்குத் தக்கதாய் ஏதாவது கொடுக்கும்படி சேர்த்து வைக்க வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.*

*வழக்கமான இம்முதல் நாள் கூட்டங்கள் மிகவும் தனிச் சிறப்புடையவைகளாகும். யூதர்கள் சாபாத் என்ற ஓய்வு நாளான வாரத்தின் கடைசி நாளை நியாயப்பிரமாணத்தின் கீழ்த் தங்களின் ஆராதனை நாளாகக் கொண்டிருக்கப் பழகியிருந்தார்கள். மனமாற்றம் அடைந்த யூதர்கள் முதல் நாளான ஞாயிற்றுக் கிழமையன்று தங்களின் விசேஷ ஆராதனையை ஏறெடுத்தார்கள். ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளுக்கு இயேசு "நான் கட்டளையிட்ட யாவையும்" (மத். 28:20) தொடர்ந்து உபதேசிக்கும்படித் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார். புதிதாய் மனம்மாற்றம் அடைந்தவர்கள் இயேசுவை மகிமைப்படுத்தும் படி வாரத்தின் முதல் நாளில் கூட வேண்டும் என்று அப்போஸ் தலர்கள் போதித்திருந்தால், அது இயேசு அவர்கள் செய்யும்படி கட்டளையிட்டிருந்ததின் நேரடி விளைவாகவே இருந்திருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பது உட்பட*

*ஆராதனைக்காக வாரத்தின் முதல் நாளில் கூடத்தொடங்கிய தென்பது இயேசு இவ்விதம் தொடங்குங்கள் என்று கட்டளை யிட்டதால் தான் தொடங்கியதென்று மிகச் சரியான, முடிவல்லாமல், வேறே முடிவுக்கு வர வேதாகம மாணவர் களால் முடியாது. இயேசு கட்டளையிட்டிருந்தவைகளை அப்போஸ்தலர்கள் தொடர்ந்து போதித்தார்கள், மனம்மாற்றம் அடைந்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தைப் பின்பற்றினார்கள்.*

***"ஜெபம்"***

*விருவிருப்பான மற்ற மாற்றங்களுடன் கூடுதலாக, ஜெபங் களும் மாற்றப்பட்டு, வித்தியாசமான முறையில் ஏறெடுக்கப் பட்டன: மனம்மாற்றம் அடைந்த இவர்கள், பெந்தெ கொஸ்தே நாளுக்கு முன்பு யேகோவா தேவனிடத்தில் ஜெபம் செய்தார்கள்; ஆனால் இப்பொழுதோ, மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவர்கள் யேகோவா தேவனிடத்தில் ஜெபம் செய்தார்கள் (கொலோ. 3:17; ரோமர் 1:8, 9; 1 தீமோ. 2:5). இந்த யூதர்கள் முன்பு, பிதாவை கனம் நிறைந்த வகையில் (நேரடியாக) அழைத்து வந்தனர்; இப்பொழுது அதே கனம் நிறைந்த வகையில் பிதாவை அவரது குமாரன் மூலமாக அழைத்து ஆராதித்தனர்.*

*அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தின் கீழ், அப்போஸ்தலருடைய உபதேசம், அந்நியோந்நியம், அப்பம் பிட்குதல் மற்றும் ஜெபங்கள் என்ற இந்த மாற்றங்கள் யாவும் ஏற்பட்டன.*

## ***ஒரு புதிய ஆராதனை அநுபவிக்கப்பட்டது***

*யோவான் 4:21-24ல் இயேசு, கிணற்றினருகில் சமாரியப் பெண்ணிடம் (அவர்களின்) ஆராதனையானது விரைவிலேயே எருசலேமையோ அல்லது சமாரியாவின் மலைகளையே சார்ந்திராமல் ஏறெடுக்கப்படும் என்று வாக்குத்தத்தம் செய்தி ருந்தார்; இதற்கு மாறாக, உண்மையான ஆராதனையானது "ஆவியிலும், உண்மையிலும்" ஏறெடுக்கப்படும். சமாரியர்கள்*

என்பவர்கள், இராஜ்யம் பிளவுபட்டபோது (1 இரா. 12; 13) யெரோபெயாமைப் பின்பற்றிய கலகக்காரர்களின் வாரிசுகளாய் இருந்தார்கள். ஆபிரகாமின் பிள்ளைகள் எருசலேமுக்குப் போகாமல் சமாரியாவின் மலைகளிலேயே ஆராதனை செய்ய முடியும் என்று அவர்கள் (சமாரியர்கள்) உரிமை கோரினார்கள். உண்மை மிக்க இஸ்ரவேலர்கள் எருசலேமில் சென்று தொடர்ந்து பஸ்காவை ஆசரித்தார்கள், ஆனால் யெரோபெயாமோ பஸ்காவுக்குப் போட்டியாக ஒரு பண்டிகையை நியமித்து அவரைப் பின்பற்றுபவர்கள் எருசலேமுக்குப் போகாதபடியும், ரெகொபெயாமைச் சேவிக்காதபடியும் செய்தார் (1 இரா. 12:26-33).

சமாரியப் பெண்ணிடம் இயேசு பேசுகையில், காலங்காலமாய் நிலவிய அந்த வாக்குவாதங்களைக் கண்டுகொள்ளாது, தேவனை ஆராதிக்கும் செயலானது விரைவிலேயே ஆவியிலும் உண்மையிலும் ஏற்றெடுக்கத்தக்கதாக மாற்றப்படும் என்று அறிவித்தார். "ஆவியில்" ஆராதித்தல் என்பது, ஆராதிப்பவருக்குள் உண்டாகும் விருப்பங்கள் மற்றும் நோக்கங்களைக் குறிக்கின்றது. "உண்மையில்" ஆராதித்தல் என்பது, ஆராதிப்பவரின் செயல்பாடுகள் தேவனுடைய வசனமாகிய சத்தியத்தின்படியானதாகும் என்று அர்த்தப்படுகின்றது. வெறுமையான சடங்காச்சாரத்தில் தேவனுக்கு ஏறெடுக்கும் ஆராதனையானது ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இருப்பதில்லை. தேவன் அறிவுறுத்தியிராத செயல்பாடுகளும் ஆராதனையாக ஏறெடுக்கத் தக்கவையல்ல.

உண்மையான ஆராதனையின் பண்புகள் பல உள்ளன. முதலாவது, உண்மையான ஆராதனை என்பது உள்ளார்ந்தது ஆகும். இயல்பான வெளிப்படைச் செயல்கள் அதில் இருந்தாலும், ஆராதிப்பவர்களின் சிந்தைகள், உண்மை ஆராதனை மற்றும் துதி என்பவை தனிநபர் ஒவ்வொருவரின் சிந்தையிலிருந்தும் ஊற்றெடுத்து வெளிப்பட வேண்டும்.

இரண்டாவது, உண்மையான ஆராதனை என்பது இலக்கார்ந்தது ஆகும். சிந்தனையில் கொண்ட நோக்கத்தின்படி ஏறெடுக்கப்படுகின்றது. ஆராதனையானது தற்செயலாக ஏறெடுக்கப்பட முடியாது. சரீர ரீதியான அசைவாடுதல்கள் மட்டுமே ஆராதனையை அமைத்து விடுவதில்லை; அதைச் செய்பவரின் இலக்கும் ஆராதனையைச் சார்ந்திருக்க

வேண்டும்.

மூன்றாவது, உண்மையான ஆராதனை என்பது மேல் நோக்கியது ஆகும். ஆராதனையானது ஆராதிக்கும் மற்றவர்களை நோக்கியோ அல்லது அவர்களையைச் சார்ந்தோ ஏறெடுக்கப்படுவதில்லை. உண்மையான ஆராதனை என்பது தேவனைத் துதிப்பதற்கும் மகிமைப்படுத்துவதற்கும் தானே தவிர, மற்றவர்களால் புகழப்படுவதற்கும் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கும் அல்ல. மற்றவர்களின் பிரயோஜனத்திற்காகச் செய்யப்படும் செயல்கள் கர்த்தருடைய ஆராதனைக்குப் புறம்பே இருக்கின்றன. ஒருவர் போதிக்கும் பொழுதோ அல்லது பாடும் பொழுதோ அதைக் கேட்பவர்கள் சில பிரயோஜனங்களைப் பெறுகின்றார்கள்; ஆனால் அதே வேளையில், கிறிஸ்தவர்கள், சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் “ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு” தங்கள் இருதயங்களிலே கர்த்தரைப் “பக்தியுடன் பாட” வேண்டும் (கொலோ. 3:16; எபே. 5:19). ஆராதனையைப் பெறுபவர் தெய்வம் மட்டுமே.

நான்காவது, உண்மையான ஆராதனை என்பது உடனடியாக ஏறெடுக்கக் கூடியதாகும். தேவனுடைய விருப்பங்களுக்குப் பதில்செயலாக அவரை நோக்கிச் செய்யப்படும் செயல்பாடுகளினால் ஆராதனை ஏறெடுக்கப்படுகின்றது. ஒரு நபர், எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் பல வழிமுறைகளில் ஆராதிக்கலாம். நடபடிகளில், ஜெபித்தலும் பாடுதலும் உள்ளரங்கமான மற்றும் வெளியரங்கமான பல வித சந்தர்ப்பங்களில் ஒருவருடைய ஆத்துமாவின் விருப்பத்திற்கிணங்க நடைபெற்றது. ஆராதனை என்பது உடனடியாக ஏறெடுக்கக் கூடியதாகவும், தேவனுடைய வசனத்தில் உள்ள அறிவுறுத்தல்களுக்குப் பதில்செயலாக தேவனை நோக்கி ஒருவர் செய்யும் விருப்பார்ந்த செயல்பாடுகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

மற்றும், உண்மையான ஆராதனை என்பது வீணானதல்ல (மாற். 7:7). அது அறியாமையானதும் அல்ல (அப். 17:23) மற்றும் அது மனிதருடைய சுயஇஷ்டம் அல்லது முடிவுகளின்படியும் ஆராதிக்கப்படுவதல்ல (கொலோ. 2:20-23).

# முடிவுரை

தேவனை ஆராதித்தல் என்பது இப்பொழுது எங்குமுள்ள கிறிஸ்தவர்களின் சிறப்புரிமையாக இருக்கின்றது. அது புவியியல் ரீதியாக எந்தவொரு இடத்திற்குமோ அல்லது ஆசாரியக் கோத்திரம் ஒன்றிற்கோ கட்டுப்படுத்தப்பட்டதா யிருப்பதில்லை. எல்லாக்கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டு, தேவனுக்கு ஏற்புடைய ஆராதனையை ஏறெடுக்கக் கூடியவர்களாய் இருக்கின்றார்கள் (1 பேது. 2:5, 9-11). ஆராதனையின் செயல்பாடுகள் (கர்த்தருடைய பந்தி, ஜெபம், பாடல்கள், போதனை மற்றும் காணிக்கை கொடுத்தல் ஆகியவை) பரிசுத்தவான்கள் கூடும்பொழுது செய்யப்பட வேண்டியவைகளாய் இருந்தாலும், இவைகளில் சில செயல் பாடுகள் எங்கும் எப்பொழுதும் தகுதியானவைகளாய் இருக்கின்றன. கர்த்தருடைய பந்தி என்பது இதில் ஒரு விதிவிலக்காக, வாரத்தின் முதல் நாளில் தவிர மற்ற நாட்களில் பங்கேற்க முடியாததாக உள்ளது. நடபடிகள் முழுவதிலும், பாடல்கள், ஜெபம், போதனை மற்றும் காணிக்கை கொடுத்தல் என்பவை வாரத்தின் முதல் நாளிலும் மற்ற நாட்களிலும் செய்யப்பட்டவைகளாய்க் காணப்படுகின்றன. ஆகையால் இப்புத்தகத்திலிருந்து நாம், கர்த்தருடைய பந்தியில் வாரத்தின் முதல் நாள் தவிர மற்ற நாட்களில் பங்கேற்பது தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று முடிவு செய்ய வேண்டியதாயிருக்கின்றது. கர்த்தர் மற்ற நாட்களில் எதிலும் உயிர்த்தெழவில்லை, அவருடைய மரணத்தைச் சிறப்பாய் நினைவுகூருவதற்கு மற்ற எந்த நாள் ஒன்றும் நியமிக்கப்பட வில்லை.

கர்த்தருடைய நாள் என்பது சிறப்பான வழிபாடு மற்றும் நினைவுகூருதலுக்கான நாள் ஆகும் (வெளி. 1:10). கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்ற மன்னிப்பையும் நமது பாவங்களுக்காக அவர் பலியானதையும் நினைவுகூருவதற்கு ஒவ்வொரு ஏழு நாட்களிலும் ஒரு தரம் நாம் சிறப்பான ஈவைப் பெற்றுள்ளோம்.

தேவன் ஒருவரே ஆராதிக்கப்பட வேண்டியவர் என்பதால், அவரைக் கனப்படுத்த மனிதர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்ளும் உரிமையையும் அவர் ஒருவர்

*மட்டுமே பெற்றுள்ளார். ஆராதனையில் மனிதர்கள் தங்கள் சொந்த சட்டங்களை ஏற்படுத்திக் கொள்வதென்பது எவ்வளவு அகம்பாவமுள்ளதாய் இருக்கின்றது! தேவனைப் பிரியப்படுத் துவது எது என்று எளிமையாய்ப் போதிக்கப்பட்டிருப்பதற்கு மாறாக மனிதர்கள் தங்களைப் பிரியப்படுத்துவதை அடிக்கடி தேர்ந்து கொள்கின்றார்கள்.*

*யூதப் பின்னணியில் இருந்து வந்தவர்களான நடபடிகளின் புதிய கிறிஸ்தவர்கள் தேவனுடைய புதிய அறிவுறுத்தல்களைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள். இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்படுத்திக் கொண்ட அற்புதமான மாறுதல்களை நடபடிகள் பதிவு செய்துள்ளது, அவர்களின் உதாரணங்கள் இன்றைய மக்களாலும் கவனிக்கப்பட்டு, கனப்படுத்தப்படத் தகுதியானவைகளேயாகும்.*

## *செயல்படுங்கள்*

*''ஏதாவதொன்றைச் செய்யுங்கள். முன் செல்லுங்கள், பின்பற்றுங்கள் அல்லது வழியிலிருந்து விலகுங்கள்!''*

*''மலை ஒன்றைப் பார்ப்பதினால் மட்டும் எவ ரொருவரும் அதன் உச்சிக்கு ஏறிச் சென்றதில்லை.''*

*''தோல்வி என்பது உலகிலேயே மிக மோசமான விஷயமல்ல. முயற்சி செய்யாமல் இருப்பதே மிகவும் மோசமானதாகும்.''*

*''சிந்திக்காமல் செயல்படுதல் என்பது குறி வைக்காமல் சுடுவதற்கு ஒப்பாகும்.''*